
எகிப்து தேசத்திலே
கர்த்தரின் அடையாளம்
“In Egypt’s land the
signs of God were shown”
Album 20 Song 6

எகிப்து தேசத்திலே

78 சங்கீதம்

எகிப்துதேசத்திலே கர்த்தரின் அடையாளம்
சோவான் வெளியிலே தேவனின் அற்புதம்
தெரியுதே தெரியுதே கர்த்தர் மெய்தெய்வமாம் தெரியுதே
புரியுதே புரியுதே கர்த்தரின் காரியமெல்லாம் புரியுதே

நதிகளை இரத்தமாக மாற்றினவர் நீரே
ஜலத்தைக் குடிக்காதபடி செய்தவரும் நீரே

அழிக்கும் வண்டுகளை அனுப்பினவர் நீரே
கெடுக்கும் தவளைகளையும் அனுப்பினவர் நீரே

பயிரின் விளைச்சலை புழுக்களுக்கு கொடுத்தீரே
பிரயாசத்தின் பலனை வெட்டுக்கிளிகளுக்கும் கொடுத்தீரே

திராட்சை செடிகளை கல்மழையினால் அழித்தவரே
அத்திமரங்களை ஆலங்கட்டி மழையாலும் அழித்தவரே

மிருக ஜீவன்களை கல்மழைக்கு ஒப்புக்கொடுத்தீரே
ஆடுமாடுகளை இடிகளுக்கும் ஒப்புக்கொடுத்தீரே

உக்கிரமான கோபத்தை எகிப்திற்கு அனுப்பினீரே
தீங்கு செய்யும் தூதர்களையும் அங்கே அனுப்பினீரே

கர்த்தரின் கோபத்திற்கு வழியை திறந்தீரே
ஜீவனை கொள்ளை நோய்க்கு ஒப்புக்கொடுத்தீரே

எகிப்திலே தலைச்சன்களை அனைத்தையும் அழித்தவரே
காமின் கூடாரங்களின் முதற்பலனையும் அழித்தவரே

ஆடுகளைப்போல் ஜனங்களைப் புறப்படப்பண்ணினவரே
மந்தைகளைப்போலவே நடத்திக்கொண்டு போனவரே

ஜனங்களை பத்திரமாய் வழிநடத்தினீரே
சத்துருக்களைக் கடலுக்குள்ளே மூடிப்போட்டவரே

ஜனங்களைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு கொண்டுவந்தவரே
வலக்கரத்தால் சம்பாதித்த பர்வதத்திற்குள் சேர்த்தவரே

தேசத்தில் எதிரிகளைத் துரத்திவிட்டவரே
தேசத்தை நூல்போட்டு பங்கிட்டு குடியேற்றினவரே



"In Egypt's land the signs of God were shown"

Album 20 Song 6